**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள்**

**முன்னிலை திரு.தெ.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப.,**

செ.மு.எண்.அ3/ 2041117/2024 நாள்- 16.05.2024.

பொருள்- பொதுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணி நியமனம்) விதிகள்-2023 வகுக்கப்பட்டு ஆணையிடப்பட்டது - கருணை அடிப்படையில் பணிநியனம் வழங்குவது மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் தெளிவுரைகள் வழங்கப்பட்டது - திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் செய்யப்பட்ட 05 இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை -

1) அரசாணை(நிலை)எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ.-1)துறை நாள் -8.03.2023.
2) அரசு கடித எண்.5532/G2/2023 மனிதவள மேலாண்மைத்(G)துறை நாள் -20.09.2023.
3) கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் எண்.ஆ.கு3/4600/2024 நாள் - 20.2.2024.
4) கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் எண்.ஆ.கு3/4600/2024 நாள் - 18.3.2024.
5) அரசுக்கடிதம் (1D) எண்.368, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணி-9(1) பிரிவு நாள்-1.04.2024.
6) கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் எண்.ஆ.கு2/1/2022 நாள் - 24.4.2024.
7) தொடர்புடைய ஆவணங்கள்

>>>>><<<<<

**ஆணைகள்:**

பார்வையில் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களில், அரசுத்துறையில் பணியாற்றி பணியிடையே காலஞ்சென்ற அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவது மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக பல்வேறு நெறிமுறைகள்/வழிமுறைகள் மற்றும் தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு பார்வையில் காணும் கடிதங்களின் அறிவுரைப்படி அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளில் பணிவரன்முறை செய்தும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி விதிகளின் விதி 23(அ)-ன் படி தகுதிகாண் பருவம் தொடங்கியும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப் பட்ட முறை | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை முடித்தும், தகுதிகாண் பருவம் துவக்கியும் உத்தரவிடப்படும் நாள் | இவ்வலுவலக கோப்பு எண். |
|---|---|---|---|---|---|
| 1. | திருமதி. நே.ஜெயலட்சுமி, இளநிலை வருவாய் ஆய்வாளர், வருவாய் கோட்ட அலுவலகம், ஆரணி. | க.அ.ப.நி | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் | அ3/7490/2017 |
| 2. | திரு.பி.ஆல்ட்ரின் மெர்மோஸ் பிரிட்டோ இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கீழ்பென்னாத்தூர். | க.அ.ப.நி | 22.02.2021 பிற்பகல் | 22.02.2021 பிற்பகல் | அ3/27894/2018 |
| 3. | திரு.ர.கார்த்திக், இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருவண்ணாமலை. | க.அ.ப.நி. | 15.07.2021 முற்பகல் | 15.07.2021 முற்பகல் | அ3/23586/2020 |
| 4. | திருமதி.க.அம்பிகா, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருவண்ணாமலை. | க.அ.ப.நி. | 27.01.2023 முற்பகல் | 27.01.2023 முற்பகல் | அ3/17451/2017 |
| 5 | திரு.சா.முரளி, இளநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், வந்தவாசி. | க.அ.ப.நி | 08.08.2023 முற்பகல் | 08.08.2023 முற்பகல் | அ3/63036/2016 |

மேற்கண்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்ட இவ்வாணையினை தனியர்களது பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டியது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.

பெறுநர்:-

சம்மந்தப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்கள்.

(தொடர்புடைய அலுவலர் மூலமாக)

நகல் - சம்மந்தப்பட்ட அலுவலர்கள்.

நகல் - கருவூலக அலுவலர், மாவட்ட கருவூலம், திருவண்ணாமலை.

நகல் - கூடுதல் தலைமை செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை -5.

நகல் - அ3 இருப்பு கோப்பிற்கு / தொடர்புடைய கோப்பிற்கு.